**DEPOSITION OF WITNESS**

**(CHAPTER XXIII OF Crl. Procedure/XXV OF BNSS)**

**4 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம்/4 வது நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சைதாப்பேட்டை,**

**C.C.No.1844/2020**

அரசு தரப்பு சாட்சி : **P.W.5**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.எம்.சரவணன், காவல் ஆய்வாளர் |
| வயது | : | 52 |
| தந்தை பெயர் | : | மாணிக்கம் |
| விலாசம் | : | ஜே.7 வேளச்சேரி காவல் நிலையம், சட்டம் ஒழுங்கு பிரிவு, சென்னை |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 1st day of July 2026

(எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். )

**எதிரிகள் தரப்பில் சாட்சி மறுபடியும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

தனி அறிக்கை கொடுக்கப்பட்ட நேரமும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நேரமும் ஒன்றாக உள்ளது என்று சொன்னால் சரிதான். தனி அறிக்கை தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதில் எதிரிகளின் அங்க அடையாளங்கள் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். தனி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் ராயல் சலூன் மற்றும் ஸ்பா இயங்கிவருகிறது என்றால் அதுபற்றிய தனி அறிக்கையில் இல்லை. தனி அறிக்கை மற்றும் மறுவாக்குமூலத்தில் தன்னை விபச்சாரத்திற்கு தூண்டியதாக எந்தவொரு கைபேசி தகவல் பரிமாற்றம் நடந்ததாக குறிப்பு இல்லை என்றால் சரிதான்.

2. ராயல் ஸ்பா எத்தனை அறைகளை கொண்டது என்ற குறிப்பு தனி அறிக்கையில் இல்லை என்றால் சரிதான். மறுவாக்குமூலத்திலும் அதை பற்றி சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அதில் வெளியே இருக்கும் உள்ளே பார்க்கும் வண்ணம் ஆண்களுக்கு தனியாகவும், பெண்களுக்கு தனியாகவும transperant glas போடப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். நாங்கள் போன இடம் தனி வீடா அல்லது பிளாட்டா என்றால் பிளாட். அது முதல் மாடியில் உள்ளதா என்றால்

**சாட்சியின் கையொப்பம்**

ஆமாம். நான் எவ்வளவு நேரம் பாதிக்கப்பட்ட பெண்களையும், எதிரிகளையும் சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தேன் என்றால் சுமார் 2 மணி நேரம்.

3. அங்கே இருக்கக்கூடிய இரண்டு தனிநபர்களை சாட்சிக்காக அழைத்தேனா என்றால் வீட்டின் உரிமையாளர் சண்முகம் என்பவரை விசாரித்தேன். மற்ற தனிநபர் சாட்சி கிடைக்காததால் போலீசாரை சாட்சியாக வைத்தேன். சண்முகத்தை எந்த தேதியில் விசாரித்தேன் என்றால் 21.10.2019. நேரம் ஞாபகம் இல்லை. அந்த பிளாட்டில் இருந்த சிசிடிவி பதிவுகளையும், அந்த சலூனில் இருந்த சிசிடிவி பதிவுகளையும் கைப்பற்றினேனா என்றால் சிசிடிவி இருந்ததாக ஞாபகம் இல்லை. தப்பான தொழில் செய்ததாக பணம் எதுவும் நான் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரிதான். சட்டவிதிகளுக்குட்பட்டு நடக்கும் licenced spa என்றாலும், தவறான தகவலின் அடிப்படையில் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிகள் நான் சொல்வது போல் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், அவர்கள் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் பெண்களை தவறான தொழிலில் ஈடுபடுத்தவில்லை என்றாலும் சரியல்ல. வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

Taken down on my dictation in open court in the presence of accused. Read over to the deponent and admitted by him to be correct.

ALICIA N
Digitally signed by ALICIA N
Date: 2026.07.01 13:14:06 +0530

IV Metropolitan Magistrate
Saidapet, Chennai-15